



# எருக்கு

எருக்கஞ்செடிகளைச் சாலையோரங்களிலும், புதர்கள் அடர்ந்த பகுதிகளிலும், வெட்ட வெளிகளிலும் நாம் எளிதாகப் பார்க்கலாம். இதன் தண்டை முறித்தாலோ, இலைகளைப் பறித்தாலோ பால் போன்ற திரவம் வெளியேறும். இதனாலேயே இதற்கு ஆங்கிலத்தில் Milkweed என்று பெயர். இந்தச் செடியில் எப்போதும் பல பூச்சிகள் இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம்.

கன்னடத்தில் இந்தச் செடிக்கு "எக்கே கிடா" என்றும், இந்தியில் "ஆக்" என்றும் அழைக்கப்படுகிறது. உங்கள் ஊரில் இந்தச் செடிக்கு வேறு பெயர் ஏதேனும் உள்ளதா?

எருக்கம்பால் நம் தோலில் பட்டால் அந்த இடத்தில் எரிச்சல் ஏற்படலாம், அதனால் இது நம் கண்களில் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே இந்தச் செடியைத் தொட்ட பிறகு எப்போதும் கைகளை நன்றாகக் கழுவ வேண்டும். இப்படி ஒவ்வாத்தன்மையுள்ள பால் போன்ற திரவத்தைச் சுரப்பதன் மூலம் இவற்றை உண்ணும் பூச்சிகளிடமிருந்து

தன்னை இச்செடி பாதுகாத்துக் கொள்கிறது. வேறு எந்த வழிகளால் தாவரங்கள் தங்களைப் பாதுகாக்கின்றன?





### இலைகள்

எருக்கின் இலைகள் மென்மையானவை. நீள்வட்ட வடிவில், பச்சை நிறத்தில் மேலே சாம்பல் படிந்தாற் போலக் காணப்படும். இந்த இலைகளை மென்று கொண்டிருக்கும் உடலில் வரிகளைக் கொண்ட புழுவைக் கண்டால் ஆச்சரியப்பட வேண்டாம். அது வெந்தய வரியன் (Plain Tiger) பட்டாம்பூச்சியின் புழுப்பருவம்! எருக்கு இப்பட்டாம்பூச்சிக்கான "ஓம்புத் தாவரம்" – அதாவது, பட்டாம்பூச்சிகள் இங்கே முட்டைகளை இடுகின்றன. புழுக்கள் வெளிவந்ததும் அவை இதன் இலைகளைத் தின்று வளருகின்றன.

அந்தப் பட்டாம்பூச்சியை அருகில் சென்று பார்த்து இருக்கிறீர்களா? வெந்தய நிற சிறகில் கறுப்பு வரிகள் இருப்பதால் அதற்கு அந்தப் பெயர்!

### மலர்கள்

எருக்கம் பூ ஊதாவும் வெள்ளையுமான நிறத்தில் இருக்கும். கிரீடம் போலத் தோற்றமளிப்பதால் ஆங்கிலத்தில் Crown Flower என்றழைக்கப்படுகிறது. இந்தப் பூக்களுக்குத் தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகள், வண்டுகள், பழ ஈக்கள், குளவிகள் அனைத்தும் அடிக்கடி தேன் குடிக்க வருகின்றன.









### பழம் & விதைகள்

இதன் பழங்கள் முற்றி வெடிக்கும்போது உள்ளே தட்டையான சிறிய விதைகள் இருக்கும். ஒவ்வொரு விதைக்கும் பஞ்சு மிட்டாய் போல் மென்மையான வெள்ளை இழைகள் இருக்கும். இந்த இழைகள் விரிந்து காற்றில் அடித்துச் செல்லப்பட்டு வேறு இடங்களுக்கு விதையை எடுத்துச் செல்லும். இவற்றைக் குழந்தைகள் தாத்தாப்பூ என்றும் சொல்வார்கள். இதன் இழைகளைப் பறவைகள் எடுத்துச் சென்று கூட்டின் உள்ளே குஞ்சுகளுக்கு மெத்தை போல அமைக்கின்றன.
ஒரு விதையை எடுத்து உங்கள் உள்ளங்கையில் வைத்து மெதுவாக ஊதிப் பாருங்கள் – அது பறக்கிறதா?





### தண்டு & பட்டை

எருக்கஞ்செடியின் தண்டு வலிமையாகவும் பால் நிரம்பியதாகவும் இருக்கும். தண்டின் மீது வண்டுகள், பச்சை, மஞ்சள் கலந்த அழகான வெட்டுக்கிளிகள் இருப்பதைக் காணலாம் . இந்த வெட்டுக்கிளிகள் இலைகளிலிருந்து எருக்கம்பாலை உட்கொள்வதால், அவற்றைப் பிடித்து உண்ணும் விலங்குகளுக்கு அது உண்ணமுடியாத சுவையில் இருக்கும். . அதன் பிரகாசமான நிறமே "என்னைப் பிடிக்காதே !" என எச்சரிப்பது போல இருக்கும்.

**எறும்புகள் & அசுவினி பூச்சிகள்** – இலை, தண்டுகளில் சிறிய மஞ்சள் அல்லது வெள்ளை நிற அசுவினி பூச்சிகள் (aphids) இருக்கும். அவற்றின் அருகில் எறும்புகளையும் பார்க்கலாம். ஏன் தெரியுமா?
அசுவினி பூச்சிகள் எருக்கம்பாலை உண்டு, இனிப்பான திரவத்தை (Honeydew) வெளியிடுகின்றன. எறும்புகள் அதை விரும்பி குடிக்கும். இதற்குக் கைமாறாக அவை அசுவினி பூச்சிகளை மற்ற எதிரிகளிடமிருந்து காக்க உதவுகின்றன!

உங்கள் வீட்டு அருகில் இருக்கும் ஓர் எருக்கஞ்செடியைப் பாருங்கள். அதில் என்னென்ன உயிரினங்கள் இருக்கின்றன என்று கவனியுங்கள் அல்லது அந்தச் செடியையும், அதிலுள்ள உயிரினங்களையும் படம் வரையுங்கள்.

Illustration and Design: Labonie Roy
Tamil Translation: Sarumathi and P. Jeganathan
This work is licensed to Nature Classrooms under CC BY-NC-SA 4.0.